இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

ஞாயிற்றுக்கிழமை 04-06-2023

நூற்றாண்டின் தலைவர்!

நூறு ஆண்டுகள் வாழ்ந்தவர்களுக்கு எல்லாம் நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவது இல்லை. நூறு ஆண்டுகளுக்கு முன் என்னவாக வாழ்ந்தார்கள் என்பதை வைத்தே நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது. வாழ்ந்த காலத்திலேயே நூற்றாண்டின் தலைவராக வாழ்ந்தார் கலைஞர். அதனால் அவருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது!

நூறு ஆண்டுகள் வாழ்ந்த அனைவருமே நூற்றாண்டின் தலைவராகப் போற்றப்படுவது இல்லை. தான் வாழ்ந்த காலத்தின் திசையைத் தீர்மானிப்பவராக யார் இருந்தார்களோ, அவர்களே நூற்றாண்டின் தலைவராகப் போற்றப்படுகிறார்கள். நேற்றும், இன்றும் மட்டுமல்ல; நாளைய திசையையும் தீர்மானிப்பவராக கலைஞர் அவர்கள் இருக்கிறார்கள். அதனால்தான் நூற்றாண்டின் தலைவராகப் போற்றப்படுகிறார்!

எப்படி அவருக்கு இத்தனை புகழ்கள் வந்து சேர்ந்தன? வாழ்ந்த காலத்தில் போற்றுதலுக்குரிய அனைத்தையும் அவர் செய்து காட்டினார். அதனால்தான் இத்தனை புகழ்கள்!

எதனால் அவர்மீது இத்தனை பழிச்சொற்கள்? சிறந்த செயல் செய்த அனைவரும் பழிச்சொற்களைத் தாங்கித்தான் ஆக வேண்டும். உலகம் போற்றும் தந்தை பெரியார் மீது இல்லாத பழிச்சொற்களா? ரசிகமணி டி. கே.சி. எழுதினார்: 'ஒருவர் நல்ல தலைவராக இருந்தால் அவர்மீது ஏராளமான பழிச்சொற்கள் இருக்க வேண்டும்' என்று; பல்லாயிரமாண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான உரிமைக் குரலை எழுப்பியவர் கலைஞர். அவர்களை ஒடுக்கி வைத்திருந்தவர்களுக்கு எதிரி கலைஞர். எதிர்ப்பு என்பது இவர்களிடம் இருந்து வருவது தான். இந்தத் தரப்பிடம் இருந்து எதிர்ப்பு வருவது இயல்பு தானே! அந்த எதிர்ப்பில்தான் கலைஞர் எனும் நெருப்பின் இருப்பு அடங்கி இருக்கிறது. நெருப்பு அடங்காமல் இருந்தது இறுதி வரையில்!

அறம்பாடும் வள்ளுவனாய் -

காவியம் தீட்டும் இளங்கோவாய் -

போர்ப்பரணி பாடும் பாரதிதாசனாய் -

பகுத்தறிவு எரிமலைப் பெரியாராய் -

இனம்மொழி காக்கும் அண்ணாவாய் -

மேடையில் அஞ்சாநெஞ்சு பட்டுக்கோட்டை அழகிரியாய் -

சட்டமன்றங்களில் சங்கநாதமாய் -

மக்கள் மன்றத்தில் மாபெரும் வேந்தராய் - வாழ்ந்த காலமெல்லாம் தினமும் ஒன்றாக உயர்ந்து நின்றார் திருவாரூர்க் கலைஞர்.

எல்லோரும் யாரோ ஒருவரின் வார்ப்பாக இருப்பது இயல்பு தான். ஆனால் எல்லோரது வார்ப்பாகவும் வாய்த்தவர் கலைஞர். தனக்கு முன்னால் இருந்த மொத்தத் தலைவர்கள் இருந்த இடத்தையும் இட்டு நிரப்பும் ஆற்றல் அவருக்கு இருந்தது. எல்லா இடத்திலும் - எப்போதும் முதலிடம் பிடிப்பதை ஆற்றல் - சிறப்பாற்றல் - பேராற்றல் என்று சொல்லிச் சுருக்கி விட முடியாது. அந்தச் சொற்களில் அது முழுமையடைய முடியாது. இந்த அனைத்து ஆற்றல்களும் கொண்ட ஒருவரே 'கலைஞர்' என்ற சொல்லுக்குத் தகுதி வாய்ந்தவர். அத்தகைய 'கலைஞர்' என்ற சொல்லுக்குப் பொருத்தமானவர் கலைஞர்!

தமிழ்ரராய் - தமிழனூராய் - கவியூராய் - கொள்கையூராய் - புரட்சியூராய் - சேவையூராய் - சட்டவூராய் - திட்டவூராய் வாழ்ந்தார் கலைஞர். மொத்தத்தில் திருவூர் அவர். இவை அவராகத் திட்டமிட்டுக் கொண்ட வாழ்க்கையல்ல. அதுவாக - இயல்பாக அமைந்த வாழ்க்கையாகும்.

'எனக்கு மகிழ்ச்சி என்பது நீண்ட நேரம் நீடிப்பது இல்லை' என்று சொல்லிக் கொண்டார். தமிழ்ச் சமுதாயத்தின் நீண்ட நேர மகிழ்ச்சிக்குக் காரணம் அவர்!

'நான் மிகமிக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன், எத்தனை மிகமிக என்று வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள்' என்றார். ஆனால் மிகமிக ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை மிக மிக மிக முன்னேற்றியவர் அவரே. எத்தனை 'மிக மிக மிக' வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம்!

"நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்" என்பது அவரது புகழ்பெற்ற மொழிகளில் ஒன்று. அதிக உயரம் தாண்ட வேண்டும் என்ற சாதனைக்காக அவர் நீண்ட தூரம் ஓடி வரவில்லை. தமிழ்ச் சமுதாயத்தை நீண்ட உயரத்துக்கு உயர்த்த வேண்டும் என்பதற்காக நீண்ட தூரம் ஓடி வந்தார் கலைஞர். ஓடினார்... ஓடினார்... சமுதாயத்தின் உயர்வுக்காகவே ஓடினார். 95 வயது வரைக்கும் ஓடினார். 95 வயதோடு அவரது ஓட்டம் முடிந்துவிட்டதா என்றால் இல்லை!

அதற்கும் அவரே பதில் சொல்லி இருக்கிறார். 'ஒருவனின் வாழ்க்கை என்பது அவனது மரணத்துக்குப் பின்னால் இருந்து கணக்கிட வேண்டும்' என்று சொன்னவர் கலைஞர்!

அவர் பேசப்பட்டுக் கொண்டேதான் இருக்கிறார். நினைக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறார். புகழப்பட்டுக் கொண்டே இருக்கிறார். போற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறார். அவர் வாழ்ந்து கொண்டேதான் இருக்கிறார். வாழவைத்துக் கொண்டேதான் இருக்கிறார். தான் இருந்து செய்திருக்க வேண்டிய செயல்களை எல்லாம் தனது வார்ப்பான 'உழைப்பின் சிகரம்' மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கையில் ஒப்படைத்தே சென்றிருக்கிறார்.

பலரின் வெற்றிடத்தை தான் நிரப்பியவராக மட்டுமல்ல கலைஞர், தனது இடத்தையும் நிரப்பும் ஆற்றலாளரை உருவாக்கிக் கொடுத்தவர் கலைஞர். இதனால் தான் கடந்த நூற்றாண்டின் தலைவராக மட்டுமல்ல, வரும் நூற்றாண்டுகளின் தலைவராகவும் கலைஞர் ஆகப் போகிறார். காலங்கள் கடந்தும் வாழப் போகிறார்.

'மூத்தபிள்ளையாம்' முரசொலி தனது புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறது! தினமும் எல்லா நாளும் மலரும் 'முரசொலி' தாளும் கலைஞரின் தோளுக்கு விழும் புகழ்மணி மாலைகளே!

●●

ட்விட்டர் கணக்கு: முதல்வருக்கு சீமான் நன்றி!

சென்னை, ஜூன் 4-

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ட்விட்டர் கணக்கு திடீரென முடக்கப்பட்டதற்கு, கண்டனத்தை தெரிவித்த முதல்வருக்கு சீமான் நன்றி தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகளான பாக்கியராசன், இடும்பாவனம் கார்த்தி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோரின் ட்விட்டர் பக்கங்கள் ஒரே நேரத்தில் முடக்கப்பட்டன. சீமானின் அதிகாரப்பூர்வ ட்விட்டர் பக்கமான @SeemanOfficial முடக்கப்பட்டுள்ளது. சட்டபூர்வ கோரிக்கையை ஏற்று இந்தியாவில் கணக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக அந்தப் பக்கத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (2.6.2023) இசைஞானி இளையராஜா அவர்களின் பிறந்தநாளையொட்டி, அவரை நேரில் சென்று சந்தித்து, அவருக்குப் பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் ஆகியோர் உள்ளார்கள்.

பொது வாழ்வில் பக்குவம் பெற்றிருந்தார் !

நிர்வாகத்தில் ஆளுமைத் திறன் மிக்கவராக விளங்கியவர் கலைஞர்!

மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி புகழாரம் !

சென்னை, ஜூன் 4-

"முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நிர்வாகத்தில் ஆளுமைத்திறன் மிக்கவராகவும், பொதுவாழ்வில் சிறந்த பக்குவமும், ஈடுபடும் செயல்களில் அதன் நுணுக்கம் அறிந்தவராகவும் இருந்தார்..' என்று மேற்கு வங்க முன்னாள் ஆளுநர் கோபாலகிருஷ்ண காந்தி தனது உரையில் தெரிவித்தார்.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நேற்று முன்தினம் (02.06.2023) நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா இலச்சினையை வெளியிடும் நிகழ்ச்சியில் அவர் ஆற்றிய உரை வருமாறு :-

"பேரன்களுக்கு பெயர் உண்டு. அந்தப் பெயரை காப்பாற்றுகிற வேலையே மிகவும் பெரிய வேலை. அதை நான் முயற்சி செய்யவில்லை. காந்தி என்ற பெயர் எனக்கு வந்தது ஒரு விபத்து என்றே நான் குறிப்பிட்டாக வேண்டும். உண்மையில் நான் காந்தியவாதி என்று யாரும் கருத வேண்டாம். நான் இந்தியாவில் வசிக்கும் அதன் சாதாரணமான குடிமகன் மட்டுமே.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞரின் புதல்வர், நமது தமிழ்நாட்டின் முதல்வர், அடக்கமும், அமைதியும் உருவமானவர், இந்த நிகழ்வில் ஒரு பதக்கத்தைப் போல் அமர்ந்துள்ள மு.க.ஸ்டாலின் அவர்களே,

மேடையில் அமர்ந்துள்ள அமைச்சர் பெருமக்களே, தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளர் அவர்களே, சென்னை மேயர், சென்னை துணை மேயர், அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே, திருமதி கனிமொழி அவர்களே, பெரியவர் வைகோ அவர்களே, பெரியோர்களே, நண்பர்களே..

இந்த இந்திய அமைப்பு அரசு செயல்பாடு ஆகும். அரசியல் செயல்பாடு அல்ல. அதனால்தான் நான் நினைக்கிறேன் நம்முடைய முதல்வர் பல பட்டியல்களை எல்லாம் பார்த்து, பல யோசனைகளெல்லாம் கேட்டு என்னைப் போல் அரசியலில் ஆனா, ஆவன்னா தெரியாத ஒருவனை இங்கு கூப்பிட்டிருக்கார்.

தலைமைச் செயலாளர் அவர்கள் சொல்லும்போது, அவர் பணியில் இணைந்த போது கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தார். அப்போது இன்றைய முதலமைச்சர் அவர்களுக்கு அப்போது 15 வயது. இன்று கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா. இப்போது அவர் முதலமைச்சர். அந்த வகையில் இவ்விழாவில் கலந்து கொள்ள முதலமைச்சர் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்ததை நான் பெருமையாக கருதுகிறேன்.

பொதுவாழ்வில் கலைஞர் அவர்கள் பக்குவத்தின் அடையாளமாகவே திகழ்ந்தார். இங்கு பல்வேறு காவல்துறை அதிகாரிகளும், அரசு நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகளும், பல்வேறு உயர் அலுவலர்களும் இந்த விழாவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். ஆட்சி நிர்வாகத்தில் கலைஞர் அவர்கள் நிதானம், சமநிலை, எதிலும் ஒரு வரையறை வகுத்துக் கொண்டு, எப்போது என்ன செய்ய வேண்டும், எப்போது என்ன செய்யக்கூடாது என்ற அளவுகோலை நிர்ணயித்து நிர்வாகப் பணிகளை மேற்கொண்டார். அது எப்படி..? ஏன்...? அவருக்கு அப்படிப்பட்ட மனச்சம நிலை எப்படி, எங்கிருந்து வந்தது..?

கலைஞர் அவர்கள் திறமையான அரசியல்வாதி மட்டுமல்ல, மாபெரும் நிர்வாகியாகவும் இருந்தார். அந்த வகையில் இங்கே உள்ள இளம் தலைமுறை அமைச்சர்களுக்கு, குறிப்பாக மேடையில் அமர்ந்துள்ள அவரது பேரனுக்கு குறிப்பாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசியல்வாதி என்ற அவருக்குள் தேர்ந்த நிர்வாகி என்பவரும் இருந்தார். அதையும் கடந்து அவர் ராஜதந்திரியாகவும் இருந்தார். அதுவும் மிகச்சிறந்த ராஜதந்திரியாக இருந்தார். அந்த ராஜதந்திர இயல்பை அதை ஒரு மகளாக தன் தந்தையின் இயல்பை அறிய முடியும். அம்மா, அப்பா ஆகியோரை மகள்கள் தங்களுக்கான சிறப்பு வழியில் அறிந்து கொள்கிறார்கள். அவர் மாபெரும் கலைஞர். நிர்வாக திறமை அறிந்த கலைஞர். கலைஞர் என்பதற்கு என்ன அர்த்தம்..? முதலில் சொன்னதையே மீண்டும் சொல்கிறேன். அதாவது, அளவு, பகுத்தறிவு, நுணுக்கம் ஆகியவையே கலைஞர் என்பதற்கான அர்த்தம். இங்கு உள்ள யாராலுமே அதை புரிந்து கொள்ள இயலாது என்பதை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு சாதாரண இந்திய குடிமகனாக இந்தியாவின் தலையெழுத்தை நிர்மாணிக்கும் அந்த உந்து சக்தியிடம் நான் வேண்டுகிறேன். உங்கள் பொது வாழ்க்கையில் நலம் பெற வேண்டும். இன்னும் ஒரு சில வார்த்தைகளை பேசிவிட்டு நான் எனது உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன். அதற்காக முதலமைச்சர் எனக்கு 5 நிமிடம் கால அவகாசம் அளிக்க வேண்டுகிறேன். மக்கள் அளித்திருக்கும் வாக்கு கடமையை ஆற்றுவதற்கே அன்றி அதிகாரத்தை பகட்டுக்காட்சிப் பொருளாக ஆக்குவதற்கு அல்ல. பொது சொத்துகளை ஒரு அறக்கட்டளையின் சொத்துக்களை போல காக்க வேண்டும். ஆட்சியில் இருக்கும் ஒவ்வொரு நொடியும் புனிதமான நேரம் என்று நினைக்க வேண்டும்.

நான் ஏற்கனவே சொன்னதையொட்டி இன்னொன்றையும் சொல்கிறேன். முன்னாள் ஆளுநர் என்று சொன்னார்கள், முன்னாள் அதிகாரி நான். அரசியல் பற்றி எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும். அதாவது, இருவகையான அரசியல்வாதிகள்தான் இருக்கிறார்கள். யோசித்துக் பேசுகிறவர்கள், பேசிய பிறகு யோசிக்கிறவர்கள். எனக்கு அப்படிப்பட்ட நெருக்கடிகள் எதுவுமில்லை. ஆனால், பொதுவாழ்க்கையின் நோயாக உள்ள ஊழல் பற்றி இங்கு சொல்லவேண்டும். ஊழல் என்றால் அது ஊழல்தான். அதை யார் செய்தார்கல் என்று பாராமல் நடவடிக்கை வேண்டும்.

அதேபோல வன்முறை என்றால் வன்முறைதான். அதில் யார் ஈடுபட்டாலும் தக்க நடவடிக்கை வேண்டும். வன்முறை மூன்று விதமாக உள்ளது. ஒன்று தீவிரவாதம், மற்றது பெண்களுக்கு எதிரானது. மூன்றாவது குழந்தைகளுக்கு எதிரானது. இந்த மூன்றையும் எவ்விதமான பாரபட்சமும் காட்டாமல் ஒடுக்கும் நடவடிக்கை வேண்டும். அதுதான் கலைஞர் வழியிலான நிர்வாக நெறிமுறையாகும். அந்த ஆட்சி நெறிமுறையைத்தான் இன்றைய முதலமைச்சர் அவர்களும் கடைப்பிடித்து இன்றைய ஆட்சியை நடத்தி வருகிறார்.

அரசியல் அமைப்பு என்பது நமக்கு வழிகாட்டும் விளக்கு. இருந்தாலும் சில சமயங்களில், அது மூடப்பட்டு விடுகிறது. உதாரணம், 1975 முதல் 1977. அந்த மாதிரி நேரங்களில் அந்த அமைப்பு படபடத்து, பதுங்குகிறது, மூச்சுத் திணறுகிறது. ஆனால், நமது அரசியல் நிர்ணய சபையால் ஏற்றப்பட்ட தீபம், நித்ய விளக்கு என்பதில் உறுதியாக நாம் இருக்க வேண்டும். நித்ய விளக்கு அது. அதை நமது முதலமைச்சர் நன்றாக அறிவார் ஏனென்றால் அந்த பாரம்பரியம் அவரது ரத்தத்திலேயே இருக்கிறது. இந்தியா தனது பாரபட்சமற்ற நீதித்துறை, சிறந்த நிர்வாகிகள், எச்சரிக்கையான எதிர்க்கட்சி மற்றும் விழிப்புடன் கூடிய பொதுமக்கள் துணையுடன் அந்தப் பாரம்பரியத்தை காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

பாரபட்சமற்ற நீதித் துறை, சிறந்த நிர்வாகிகள், விழிப்புணர்வு கொண்ட எதிர்க்கட்சிகள் ஆகிய நிலைகளில் தமிழ்நாடு முன்னேறியுள்ளது. அவ்வகையில் கலைஞர் அவர்கள் தனிப்பட்ட முன்னுதாரணமாக இருக்கிறார். அதற்கும் அசராத, கவலை கொள்ளாத தலைவர் அவர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய விழுமியங்களே அவருக்கு மிக முக்கியம். அவ்வகையில் பெருந் தலைவர் காமராஜர், அவருக்கும் முன்னால் ஓமந்தூரார் மற்றும் ராஜாஜி ஆகியோர்களை நான் இங்கு குறிப்பிடும் போது அவர்களுக்கு மதிப்பளித்த கலைஞர் பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும்.

நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு லட்சியவாதி. அவர் எதிர்க்கட்சிகளுக்கும் தகுந்த மதிப்பு, முக்கியத்துவம் அளிக்கிறார். அந்த வகையில் எதிர்க்கட்சிகள் கருத்துக்களில் மட்டுமே மாற்றாக இருக்க வேண்டும். எண்ணங்களில் மற்றும் கருத்துகளில் புண்படுத்தும் அர்த்தங்களை வெளிப்படுத்தக் கூடாது. இதை தமிழ்நாட்டில் உள்ள எதிர்க்கட்சிக்கு மட்டும் சொல்லாமல், இந்தியாவில் உள்ள எல்லா எதிர்க்கட்சிகளுக்குமான எனது கருத்தை முன்வைக்கிறேன். நல்ல நிர்வாகிகள், அதன் நிர்வாகிகள், காவல்துறை அதிகாரிகள் உள்ளதால் நமது தமிழ் நாடு அதிர்ஷ்டம் பெற்றுள்ளது. நிர்வாக மாண்புக்கு விளக்கமாக உள்ள முதல்வர் அவர்களே, உங்கள் தலைமையில் தமிழகத்தின் நலன்கள் உறுதி செய்யப்பட்டு விட்டது.."

இவ்வாறு கோபால கிருஷ்ண காந்தி அவர்கள் உரையாற்றினார்.

நெஞ்சில் நிலைத்து நிற்பாய்!

பகுத்தறிவுப் பகலவனின்
பாசறையில் வளர்ந்திட்ட
ஞானச் சுடரொளி நீ - தமிழ்நாட்டின்
கலங்கரை விளக்கம் நீ

காஞ்சிச் செல்வனின்
உடன்பிறந்தோர் குடும்பத்தில்
வழிகாட்டும் முதல்வன் நீ - விடியல்
உதய சூரியன் நீ

தெய்வப் புலவரின்
வரிகளை விரிவாக்கி
குறளோவியம் வரைந்தவன் நீ -
அன்னார்க்கு
சிலைவடித்து நினைவாக்கியவன் நீ

ஆரூர் நகரினில்
விளைந்திட்ட சுடரினில் சமூக
இருள்நீக்கிய ஒளிவெள்ளம் நீ -
சனாதனத்தை
விரட்டிட்ட நெருப்பும் நீ

நம்பிக்கை எனச்சொல்லி
கண்மூடிப் பழக்கத்தை
சட்டத்தினுள் அடக்கிவிட்டாய்
நஞ்சை
மண்மூடிப் புதைத்துவிட்டாய்

கற்றறிந்த மாந்தரும்
கற்கஇயலா மானிடரும்
விரும்பிடும் உன்கடிதம் - படித்தால்
புடைத்திடும் நாடிநரம்புகளும்

வானத்தில் வண்ணத்தில்
வையத்தில் விளையாடும்
வார்த்தைகள் விளையாட்டு - நின்
படைப்போ
தமிழை வாழ்விக்கும் துடிப்போடு

பாயிரம் ஆயிரம்
கவிதைகள் தந்திட்ட
பாவலர்க்கு கோமானே - நீ
செந்தமிழுக்குத் தேன்தானே

"நா"வால் எழுப்பினாய்
"பே"னாவால் எழுப்பினாய் எம்மை
சிலிர்த்தோம் எழுந்தோம்
- தொண்டனாய்
உம் பின்னால் நின்றோம் நாங்கள்

'தமிழுக்குத் தொண்டுசெய்வோர்
இப்புவியில் இறப்பதில்லை'
என்றார் பாவேந்தர் தம்கவியில் -
ஆம் நீ வாழ்வாங்கு
வாழ்வாய் தமிழர் நெஞ்சில்
நிலையாய் நிலைத்து நிற்பாய்

எம்.ஜாகீர் உசேன்